# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No. 100/2025 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா– 03 ( PW– 03 ) |
| **பெயர்** | :– | நாகராஜ் |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | மாணிக்கம் |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 06 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரி நேர்நிறுத்தப்பட்டார். எதிரிக்காக இலவச சட்ட உதவி நடுவத்தின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை:-**

நான் தொளசம்பட்டியில் சந்தைபேட்டைக்கு அருகில் வசிக்கிறேன். நான் தொளசம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு எதிரில் காய்கறி கடை வைத்துள்ளேன். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரியை தெரியும். என் கடைக்கு அருகில் தேநீர் கடை உள்ளது. அங்கு அடிக்கடி வருவார். எதிரி எங்கள் ஊர்தான். நெசவாளர் காலனியில் வசிக்கிறார். சான்றாளர்கள் சிவக்குமார், கவிதா ஆகிய இருவரும் எங்கள் ஊர்தான். அவர்கள் எங்கள் ஊர் பள்ளியில் ஆசிரியர்களாக பணிபுரிகின்றனர். இருவரும் உறவினர்கள் என்று தெரியும். என்ன உறவு என்று எனக்குத் தெரியாது. எதிரி குறிப்பிட்ட வேலை எதுவும் செய்யவில்லை.

09.10.2024-ஆம் தேதியன்று மாலை 05.00 மணிக்கு தாரமங்கலம் செல்வதற்கு புறப்பட்டேன். சிவக்குமார், கவிதா ஆகியோரின் வீடு தாரமங்கலம் முதன்மை சாலையிலேயே உள்ளது. அவர்கள் வீட்டுமுன் சத்தம் கேட்டது. நான் என் வண்டியை நிறுத்திவிட்டு என்ன என்று பார்த்தேன். கவிதா அக்காவிடம் எதிரி உன் கணவர் எங்கே என்று கேட்டார். எதிரியின் பெயர் கனகராஜ். அவருக்கு எத்தனை பிள்ளைகள் என்று எனக்குத் தெரியாது. என் கணவர் வெளியே சென்றுள்ளார் என்று கவிதா அக்கா சொன்னார். உன் கணவரை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்னார். அவர் அங்கு நின்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். உறவினர்கள் பிரச்சனை என்பதால் நான் அங்கிருந்து சென்றுவிட்டேன்.

10.10.2024-ஆம் தேதியன்று நான் என் கடையில் வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். மாலை 04.30 மணியளவில் பள்ளிக்கூடம் கலைந்து சிவக்குமாரும் கவிதா அக்காவும் Hero Honda வண்டியில் வெளியே

வந்தனர். என் கடைக்கு அருகில் எதிரி மிதிவண்டியை நிறுத்தியிருந்தார். அவர் எதற்கோ நிற்கிறார் என்று நான் நினைத்தேன். சிவக்குமாரையும் கவிதாவையும் நோக்கி எதிரி வேகமாக ஆத்திரத்துடன் சென்றார். சிவக்குமாரை திட்டிக்கொண்டே பையில் இருந்து கொடுவாளை எடுத்து சிவக்குமாரின் தலையில் வெட்டச் சென்றார். சிவக்குமார் வலது கையால் தடுத்தார். அதனால் கொடுவாள் அவரின் வலது கையில் வெட்டிவிட்டது. நீ சாவுடா என்று சொல்லி மீண்டும் சிவக்குமாரை எதிரி இரண்டுமுறை கொடுவாளால் வெட்டினார். மீண்டும் சிவக்குமார் வலது கையால் தடுத்ததால் 02-ஆம் வெட்டு பெருவிரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையிலும் 03-ஆம் வெட்டு பின்னங்கையிலும் விழுந்தது. அவருடைய பெருவிரல் உள்ளங்கையின் பகுதியில் இருந்து தொங்கியது. கவிதா அக்கா கூச்சலிட்டார். நானும் அங்கு இருந்தவர்கள் சம்பவம் நடந்த இடத்தை நோக்கி சென்றோம். எதிரி கையில் வைத்திருந்த கொடுவாளால் வந்தவர்களை நோக்கி விசிறினார். சிவக்குமாரை பார்த்து எதிரி நீ இன்று தப்பித்துவிட்டாய் என்றிருந்தாலும் உன்னை நான் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு அவரது மிதிவண்டியை எடுத்துக் -கொண்டு வடக்கு நோக்கி சென்றார். கொடுவாளை அவர் வைத்திருந்த பெண்கள் ஓட்டும் மிதிவண்டியின் முன்கூடையில் வைத்து எடுத்துச் சென்றார். 10.10.2024-ஆம் தேதியன்று இரவு 10.00 மணிக்கு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். தற்போது நீதிமன்றத்தில் உள்ள கொடுவாள்தான் அது.

**குறுக்குவிசாரணை**

09.10.2024-ஆம் தேதியன்று நான் சொல்வதுபோன்று எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காய்கறி கடை வைத்துள்ள இடம் பொது இடம். வாடகை எதுவும் கொடுக்கவில்லை. காவல் துறையினர் நினைத்தால் என் கடையை காலிசெய்துவிடலாம் என்றால் சரிதான். நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றும் காவல் துறையினரின் அனுசரனை தேவைப்படுவதால் அவர்கள் சொல்லிக் கொடுத்ததுபோல் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.